


சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற மாவட்டக் கழக செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ அவைத்தலைவர் அ.கணேசன், மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன், மேயர் எஸ்.முத்துதுரை ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



சென்னை, கோட்டூர்புரம், தமிழ் இணையக் கல்விக் கழகக் கலையரங்கத்தில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தமிழ் இணையக் கல்விக்கழகம் உருவாக்கியுள்ள கணித்தமிழ் மென்பொருட்கள் மற்றும் 'தமிழைப் பிழையின்றி எழுதுவோம்' நூலினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் சே.ரா.காந்தி, இணை இயக்குநர் ரெ.கோமகன், ஒருங்கிணைப்பாளர் அ.ஜேம்ஸ், உதவி இயக்குநர்கள் திருமதி இரா. மதுரா, செல்வ புவியரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ் இணையக் கல்விக் கழகம் உருவாக்கிய ஏழு கணித் தமிழ் மென் பொருள்கள் -

# 'தமிழைப் பிழையின்றி எழுதுவோம்!' நூல்!

## அமைச்சர் - முனைவர் பழனிவேல் தியாகராஜன் வெளியிட்டார்!

சென்னை, ஆக. 29 -

தமிழ் இணையக் கல்விக் கழகம் உருவாக்கியுள்ள ஏழு மென்பொருள்களும், 'தமிழைப் பிழையின்றி எழுதுவோம்' நூலும் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜனால், நேற்று முன்தினம் (27.08.2024) தமிழ் இணையக் கல்விக்கழகக் கலையரங்கத்தில் நடைபெற்ற நிகழ்வில் வெளியிடப்பட்டன.

இணையம் வழியாக உலகமெங்கும் தமிழைக் கொண்டுசேர்த்தல், தமிழ் மரபு, பண்பாடு, நாகரிகம், கலை, இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றைப் பொது மக்களிடம் கொண்டுசெல்லுதல், மின் நூலகத்தை உருவாக்கிப் பராமரித்தல், கணித்தமிழ்ச் செயல்பாடுகளை வளர்த்தெடுத்தல் உள்ளிட்ட பல்வேறு அரும்பணிகளை ஆற்றிவரும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் ஒப்பற்ற செயல்பாட்டுக்கு மேலும் பெருமை சேர்க்கப்போகும் ஏழு மென்பொருள்கள் இன்று மக்கள் பயன்பாட்டுக்கு வருகின்றன. செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் மாணவர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் எனத் தமிழ்கூறும் நல்லுலகம் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் இந்த ஏழு மென்பொருள்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கியப் பதிப்பி, தமிழ் உரையாடி, கல்வெட்டுப் படிப்பான், தமிழ் இலக்கணம் கற்றுணரி ஆகிய நான்கு மென்பொருள்களும் தமிழ்நாடு நிதியில் உருவாக்கப்பட்டவை. இதேபோல, ஏழு கணித்தமிழ் மென்பொருள்கள் உருவாக்கப்படும் என்று சட்டமன்ற அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது. அவற்றுள் முதலாவதாக, கலைஞர் இலக்கணப் பகுப்பி என்ற மென்பொருள் கணித்தமிழ்24 மாநாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டு, தமிழ் ஆர்வலர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அதைத் தொடர்ந்து, பொருளாய்வி மென்பொருள், தமிழ் கிளை மொழிப் பேச்சொலியை எழுத்து வடிவில் மாற்றும் மென்பொருள், தட்டச்சு செய்யப்பட்ட தமிழ்ச் சொற்களைச் சரியாகப் பிரித்துப் பத்தி அமைக்கும் மென்பொருள் ஆகிய மூன்றும் இன்றைய நிகழ்வில் வெளியிடப்பட்டன. மீதமுள்ள மூன்று மென்பொருள்களும் இறுதிக் கட்ட பணியில் உள்ளன.

அனைத்துத் தரப்பினரும் மிக எளிதாகப் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஏழு மென்பொருள்களையும் தமிழ் இணையக் கல்விக்கழக இணையதளத்தில் (https://www.tamilvu.org/) கட்டணமின்றிப் பதிவிறக்கிக்கொள்ளலாம்.

இந்த மென்பொருள்கள் குறித்த சிறு குறிப்பு பின்வருமாறு:

1. தமிழ் இலக்கியப் பதிப்பி (*Index Concordance*): இம்மென்பொருள் தமிழ் இலக்கியங்களுக்குச் சொல்லடைவு, தொடரடைவு போன்றவற்றைத் தொகுத்து வழங்குகிறது.

2. தமிழ் உரையாடி (*Chatbot for Tamil Virtual Academy's Lessons*): தமிழ் இணையக் கல்விக்கழகச் சான்றிதழ்க் கல்வி, பட்டயம் மற்றும் பட்டப் படிப்புக்கான பாடங்களை எளிதாகப் படிக்கவும் புரிந்து கொள்ளவும் இக்கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது.

3. கல்வெட்டுப் படிப்பான் (*Inscription Reader*): இம்மென்பொருள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கி.பி. 6 முதல் 10 ஆம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுகளைத் தற்கால தமிழ் எழுத்துகளாக மாற்றுகிறது.

4. தமிழ் இலக்கணம் கற்றுணரி (*Tamil Learning App*): மாணவர்கள் தமிழ் மொழியினை எளிய முறையில் விளையாட்டின் மூலம் கற்றுக்கொள்ளும் வகையில் இச்செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

5. பொருளாய்வி மென்பொருள் (*Parts of Speech & Semantic Roles Labelling*): இம்மென்பொருள் தமிழ் வாக்கியங்களில் உள்ள சொற்களுக்குத் முறையான இலக்கணக் குறியீடுகளை வழங்குகிறது, மேலும் இம்மென்பொருள் அவ்வாக்கியத்தில் உள்ள சொற்பொருள் பாத்திரங்களைப் (*Semantic Roles Labelling*) பகுப்பாய்வு செய்கிறது.

6.தமிழ்ப் பேச்சொலியை (வட்டார வழக்கு) எழுத்து வடிவில் மாற்றுதல் (*Text to Speech*): இம்மென்பொருள் தமிழ்க் கிளைமொழிப் பேச்சொலியினை (*Regional Dialects*) நேரடியாக எழுத்து வடிவத்திற்கு மாற்றும் திறனைக் கொண்டது. இது தமிழ் நாட்டின் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு பகுதி கிளைமொழிகளை அடையாளம் கண்டு எழுத்து வடிவமாக மாற்றுகிறது.

7. தட்டச்சு செய்யப்பட்ட தமிழ்ச் சொற்களைச் சரியாகப் பிரித்துப் பத்தி அமைத்தல் (*Hyphenation for Tamil Typesetting*): இம்மென்பொருள், தமிழ் சொற்களை அசையை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கிறது, இதன் மூலம் எழுத்துகள் நன்றாக வரிசைப்படுத்தப்பட்டு வடிவமைக்கப்படுகின்றன.

அடுத்த நிகழ்வாக, அனைத்து தமிழை எழுத்துப் பிழைகள் மற்றும் இலக்கணப் பிழைகளின்றி எழுதுவதற்காகத் தமிழ் இணையக் கல்விக்கழகம் உருவாக்கியுள்ள 'தமிழைப் பிழையின்றி எழுதுவோம்' நூல் வெளியிடப்பட்டது.

தமிழ் எழுத்துகள், சொற்கள், தொடர்கள் ஆகியவற்றின் அடிப்படையை எளிய தமிழில் சீரிய முறையில் தொகுத்துத்தந்திருக்கும் நூல் இது. சொற்பிரிப்பு, சொற்சேர்க்கை முறைகள், புணர்ச்சி விதிகள், மொழி நடை எனப் பல்வேறு பொருண்மைகள் இந்நூலில் கையாளப்பட்டுள்ளன. இந்நூலை அமைச்சர் வெளியிட அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர், கணித்தமிழ் ஆர்வலர்கள், அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி மாணவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை மத்திய மாவட்டம் சார்பில் மானூர் மேற்கு ஒன்றியம் அழகியபாண்டியபுரம் அம்மன் கோவில் முன்பு மகளிர் அணி ஏற்பாட்டில் உறுப்பினர் சேர்க்கை முகாம் மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார், ஒன்றிய செயலாளர் அன்பழகன், மகளிர் அணி அமைப்பாளர் மகேஸ்வரி, தலைவர் ரேவதி அசோக், தொண்டரணி அமைப்பாளர் அனிதா, ஒன்றிய குழு தலைவர் செல்வி ஸ்ரீலேகா அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் பங்கேற்று உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார். நிகழ்வில் மகளிர் திரளாக கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் தேனி நகர கழக ஏற்பாட்டில் பொது உறுப்பினர்கள் கூட்டம் தேனி தனியார் மண்டபத்தில் நகர அவைத் தலைவர் துரைராஜ் தலைமையில் நடைபெற்றது. நகரச் செயலாளர் நாராயண பாண்டியன் முன்னிலையில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. சிறப்புரை ஆற்றினார் உடன் சரவணக்குமார் எம்,எல்,ஏ,. மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்ல பாண்டியன், மாவட்ட பொருளாளர் சுரேஷ். மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில முருகன், திருகண்ணன், மாநில பொதுக் குழு ராஜா, உறுப்பினர் ரமேஷ், செயற்குழு உறுப்பினர் முருகேசன், நகர மன்ற தலைவர் ரேணுகா பாலமுருகன் துணை தலைவர் வழக்கறிஞர் செல்வம். 22வது வார்டு கவுன்சிலர் கிருஷ்ணன் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### வங்கக் கடலில் இன்று குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவாகிறது!

புதுடெல்லி, ஆக. 29 -

மத்திய கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்ந்து மேற்கு, வட மேற்கு நோக்கி நகர்ந்து தெற்கு ஒடிசா, வடக்கு ஆந்திரா கரையோரம் அதற்கு அடுத்த 2 நாள் நிலவக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியகிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகள், மத்திய மற்றும் வடக்கு அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்பதால் அந்த பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

### தொழில் முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கா செல்லும்

# முதலமைச்சரின் பயணம் வெற்றிகரமாக அமைய வாழ்த்துகிறோம்!

## கி.வீரமணி – பேராசிரியர் கே.எம்.காதர்மொகிதீன் – ஏ.எம்.விக்கிரம ராஜா வாழ்த்து!





சென்னை, ஆக 28-

தொழில் முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கா செல்லும் முதலமைச்சர் அவர்களின் பயணம் வெற்றிகரமாக அமைந்திட உளம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர்மொகிதீன், வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரம ராஜா ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:

**திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி**

தமிழ்நாட்டைப் பொருளாதார ரீதியாக முன்னேற்றிட வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் என்கிற பொருளாதார இலக்கை திராவிட மாடல் அரசு நிர்ணயித்து, அதற்கான பணிகளை முனைப்பாகவும் சிறப்பாகவும் மேற்கொண்டு வருகிறது. அந்த முனைப்பின் தொடர்ச்சியாக. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக 27.8.2024 இரவு அமெரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளதையொட்டி திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள், "தங்களின் வெளிநாட்டுப் பயணம் வெற்றிகரமாக அமைய வேண்டும் என்று உள்ளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

**பேராசிரியர் கே.எம்.காதர்மொகிதீன்**

மேலும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர்கள், தங்களின் வெளிநாட்டுப் பயணம் வரலாறு படைக்கும் வெற்றிப் பயணமாக திகழ வாழ்த்துகிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

**ஏ.எம். விக்கிரமராஜா**

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா அவர்கள், தமிழக முன்னேற்றத்திற்காக அயலக மூலதனங்களை கவர்வதன் மூலம், தமிழகத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடுவதோடு, வேலைவாய்ப்பு, உற்பத்தி பெருக்கம், பணப் புழக்கம் அதிகரிப்பு, தனிமனித வருமானம் பெருக்கு, அதனால் தமிழகத்தின் உயர்வு என்ற பல்நோக்கு சிந்தனையுடன் ஆற்றிவரும் பணிக்கு பாராட்டு தெரிவித்து, அயலக பயணம் வெற்றி பெற முதலமைச்சர் அவர்களுக்கு தனது வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

### நெல்லை மத்திய மாவட்டக் கழக மகளிர் அணி சார்பில்

# வீடு - வீடாகச் சென்று மகளிர் அணி உறுப்பினர்களை அதிக அளவில் சேர்த்திடுவோம்!

## டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு!

நெல்லை, ஆக. 29 -

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க மகளிர் அணியினர் வீடு,வீடாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துவது உறுப்பினர்களை அதிக அளவில் சேர்ப்பது தொடர்பாக நெல்லை மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் 26.08.2024 அன்று நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தலைமையில் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன்,மகளிர் உறுப்பினர் சேர்க்கை பொறுப்புக்குழு உறுப்பினர் கழக மகளிர் பிரச்சாரக் குழு துணைச் செயலாளர் ஜெஸி பொன்ராணி, மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நெல்லை மத்திய மாவட்டத்தில் மகளிர் உறுப்பினர் சேர்க்கை துரிதப்படுத்தப் பட்டுள்ளது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனைகளை கருத்தில் கொண்டும், பல்வேறு திட்டங்கள் மூலம் பெண்கள்,மாணவிகள் அதிக அளவில் பயன் பெற்றுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டும் வகையில், விழிப்புணர்வு ஏற்படுத்தும் அடிப்படையில் மகளிர் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

அதன்படி 27.08.2024 அன்று நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் மானூர் மேற்கு ஒன்றியம் அழகியபாண்டியபுரம் அம்மன் கோயில் முன்பும், தெற்குபட்டி, குறிச்சிகுளம் ஆகிய பகுதிகளில் மத்திய மாவட்ட மகளிர் அணி ஏற்பாட்டில் உறுப்பினர் சேர்க்கை முகாம் மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார், மானூர் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகேஸ்வரி செந்தில்,மகளிர் அணி தலைவர் ரேவதி அசோக், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனிதா, மானூர் ஒன்றிய குழு தலைவர் ஸ்ரீலேகா அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் பங்கேற்று மகளிர் உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார்.

நிகழ்வில் மகளிர் அணி நிர்வாகிகள் லதா,அருணாசலதேவி,பவானி,ஹமீதா, ஜெனி, சித்ராபௌர்ணமி, மேகலா, பூங்கனி,மத்திய மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மீரான் மைதீன், மிக்கேல், மாவட்ட ஆதிதிராவிடர் நலகுழு அமைப்பாளர் நவநீதன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் தொப்பி மைதீன்,அமைப்புசாரா ஓட்டுனரணி அமைப்பாளர் குழந்தை இயேசு, விவசாய அணி தலைவர் போத்திக்கண்ணு,பீர்மைதீன், ஐயப்பன், ஜெயச்சந்திரன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பெண்கள் அதிக அளவில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.



பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட போகலூர் ஒன்றியம் அரியகுடி ஊராட்சி அரியகுடி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 20242025 கீழ் ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை கட்டுவதற்கான பணியினை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் போகலூர் ஒன்றியக்குழு தலைவர் சத்யா குணசேகரன் மற்றும் ஒன்றிய குழு துணைத் தலைவர் பூமிநாதன் ஊராட்சி மன்ற தலைவர் கார்த்திக் பாண்டியன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



இராஜபாளையம் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2024–2025 தலா 12 லட்சம் என 24.00 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, சேத்தூர் பேரூராட்சி வார்டு 3 வலையர் தெரு மற்றும் வார்டு 10 ஆதிதிராவிடர் தெரு என இரண்டு பகுதிகளில் நியாய விலைக்கடை அமைக்க எஸ்.தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ, தலைமையில் பூமி பூஜை நடைபெற்றது. இந்நிகழ்வில் சேத்தூர் சேர்மன் பாலசுப்பிரமணியன் செயல் அலுவலர் கண்ணன் பேரூர் கழக செயலாளர் சிங்கப்புலி அண்ணாவி துணை சேர்மன் காளீஸ்வரிமாரிச்செல்வம் கவுன்சிலர்கள் ராஜசோழன் நிஜாம் நீராத்து லிங்கம் வனராஜ் பூஇசக்கி சமுத்திரம் தவம் வார்டு செயலாளர் பண்டாரம் மாதவன் இளைஞரணி கருப்பசாமி , கழக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் என நூற்றுக்கனக்கானோர் கலந்து கொண்டனர்.